1979 மார்ச் 5] [திரு. ச. இராமச்சந்திரன்]

(ஆ) இத்திட்டம் 1979-80 ஆண்டிற்குள் முடிந்து, செயல் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காயாமொழி கூட்டுறவு நாணய விவசாய சங்கம்.

*வினா எண் 221—திரு இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், காயாமொழி கூட்டுறவு நாணய விவசாயக் கடன் சங்கம் 464-ல், 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய இருந்த தலைவர் மீது ஏதாவது ஊழல் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்றவியல் (கிரிமினல்) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடை பெற்று வருகிறது.

திரு இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, இந்த காயா மொழி கூட்டுறவு நாணய வவசாயக் கடன் சங்கத்தில் 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு காலத்தில் தலைவர் ஆக இருந்தது யார் ? எவ்வளவு தொகை ஊழல் நடந்தது என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, காயாமொழி கூட்டுறவு நாணய விவசாயக் கடன் சங்கத்தின் தலைவர் ஆக இருந்தது திரு ஆர். கே. கேசவ ஆதித்தன் என்பவர். மிக அதிக இருப்புத் தொகையை தன் கையில் வைத்துக் கொண்டிருந்தார் என்று திருநெலவேலி மத்திய கூட்டுறவு வங்கியின் சரக மேற்பார்வையாளர் தந்த அறிக்கையின் அடிப்படையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் இக்கூட்டுறவு நாணய விவசாயக் கடன் சங்கத்தின் மூலம் 99,346.22 ரூபாய் வரை கையாடல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டு இன்றைக்கு அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது.